DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Judicial Magistrate, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 139/2020** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | :டாக்டர்.திரு. அகிலாண்டபாரதி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 31.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 31th July 2026.

**A1 died. A2,A3 எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவில் தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் நான் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்த போது கடந்த 28.09.2017ம் தேதி மாலை 5.00 மணியளவில் ஆணைமுத்து என்ற துரை என்ற நபர் எண்ணிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை இனம் தெரிந்த 3 ஆண் நபர்கள் மதியம் 3.00 மணியளவில் வேலுசாமி என்பவரின் வயலில் வைத்து அரிவாளார் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதனை செய்து பார்த்தபோது, அவருடைய இடது முன் கையில் 8x3x3 cm அளவிற்கு வெட்டு காயம் காணப்பட்டது. கையை மடக்குவதில் சிறமம் இருந்தது. அவருக்கு தசைநார்

கிழிந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். அங்கு அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை பற்றிய ஆவணங்களை பார்வையிட்டதில் அவருடைய இடது முன் கையில் Radius எலும்பு முறிவு இருந்தது காணப்பட்டது. தசைநார் கிழிந்திருந்து காணப்பட்டது. அறுவை சிகிச்சை மூலம் சீரமைக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றிதழ் வழங்கினேன். நான் வழங்கிய **காயச்சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆகும்**. வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

காவல் துறை உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது நான் அ.சா.1 க்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் ஸ்கேன், x–ray டிஸ்சார்ச் summary ஆகிய ஆவணங்களை நான் காவல்துறை விசாரணையின் போது அவர்களிடம் கொடுத்தேனா என்றால் நான் சங்கரன்கோவில் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்தேன். மேற்படி ஆவணங்களை புலனாய்வு அதிகாரி திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்று அ.சா.1–ன் சிகிச்சையின் டிஸ்சார்ச் summary–யை பெற்று என்னிடம் காண்பித்தார் அதன் அடிப்படையில் நான் காயச்சான்றிதழ் வழங்கினேன். பொதுவாக ஆட்டிற்கு குழை வெட்டும்போது தவறுதலாக கை தவறி அந்த காயம் ஏற்பட வாய்புள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

**மறுவிசாரணை இல்லை**

M MARI

Digitally signed by M MARI
Date: 2026.07.31 20:01:38 +0530